Vol. 5, Issue-1, June 2021 P.No. : 41 - 47

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

SACRED HEART RESEARCH PUBLICATIONS

http://shcpub.edu.in

**முனைவர் க. மோகன்காந்தி,**
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ்த்துறை,*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),*
*திருப்பத்தூர்-635 601*

---

**தலைப்பு :** **ஏலகிரிமலையில் தொல்லியல் சான்றுகள்**

---

## முன்னுரை

மனித இனம் வேளாண்மையைக் கண்டறிவதற்கு முன்பாக மலைகளில் கிடைத்த இயற்கை உணவுகளையும், விலங்குகளை வேட்டையாடியுமே வாழ்ந்து வந்தனர். இதனால் மனிதனின் முதல் குடியேற்றம் மலையும் மலைச் சார்ந்த குறிஞ்சி நிலம் என்பதை ஏற்கலாம். இத்தகைய மலை நிலங்களில் காணக்கிடைக்கும் தொல்லியல் தடயங்கள் முக்கியமானவையாகும். அந்த வகையில் வேலூர் மாவட்டத்தில் ஏலகிரிமலையிலுள்ள தொல்லியல் சான்றுகள் ஆய்வுக்களமாக அமைகிறது.

## 1. ஏலகிரிமலை கற்கோடரிகள்

ஏலகிரிமலையில் 14 கிராமங்கள் உள்ளன. இவற்றில் ஏராளமான பழங்கற்காலத் தடயங்களும், நடுகல் மற்றும் கல்வெட்டுகள் தொடர்ச்சியாகக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அவ்வகையில் அத்தனாவூரில் உள்ள கோயிலுக்குள் இருக்கும் கற்கோடாரிகள் இம்மலையின் பழமையான மரபை எடுத்துரைத்துக் கொண்டிருக்கின்றது. கோயிலின் உட்புறத்தில் கல் உரல் ஒன்று உள்ளது. இதைச் சுற்றிலும் சிறிதும், பெரிதுமாக ஏராளமான கற்கோடரிகள் உள்ளன. இவை இரும்பைக் கண்டறிவதற்கு முன்பாகத் தமிழர் பயன்படுத்திய கல்லாயுதங்கள் ஆகும். இவ்வாயுதங்கள்

பயன்பாட்டில் இருந்த காலத்தைப் புதிய கற்காலம் என்பர். இதன் காலம் ஏறத்தாழ 3,000 ஆண்டுகள் ஆகும். ஏலகிரிமலையில் கி.மு. 1000 முதலே மனித குடியேற்றம் இருந்ததை இதன் மூலம் அறிய முடிகிறது.



**2. திருப்பத்தூர் பெயர் தாங்கிய பல்லவர் கால நடுகல் கல்வெட்டு**

பழமையான பல்லவர் காலத்தைச் சேர்ந்த நடுகல் ஒன்று ஏலகிரி மலையிலுள்ள மங்களம் கிராமத்தில், பள்ளிக்கூடத்து ராமசாமி நிலத்தில் கண்டறியப்பட்டுள்ளது. பல்லவர் காலத்தைச் சேர்ந்த இந்நடுகல் படுத்த கோலத்தில் உள்ளது. 6 அடி உயரமும் 3 அடி அகலமும் கொண்டதாக இந்நடுகல் உள்ளது. நடுகல் வீரன் வலது கையில் குறுவாளை ஏந்தியுள்ளது. இடது கையில் வில் உள்ளது. இடையில் கச்சு அணிந்து, உறைவாளுடன் வீரன் காட்சித் தருகிறார். கழுத்தில் ஆபரணங்கள் உள்ளன. இவ்வீரனின் மார்பு புறத்தில் அம்பு ஒன்று பாய்ந்துள்ளது. மேலும் வலது தொடையில் பாய்ந்த அம்பு இடது தொடையின் வழியாக வெளிப்பட்டுள்ள காட்சி நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளது. வீரனின் இடது கை ஓரத்தில் குதிரை ஒன்று வீரன் அமர்வதற்கான சேனத்தோடு காட்சி தருகிறது. இக்குதிரை இந்நடுகல் வீரனின் வாகனமாக இருக்க வேண்டும். மேலும் இவன் இனக்குழுத் தலைவனுக்கான அடையாளத்தோடு காணப்படுகிறான். நடுகல் வீரனின் இடது கால் ஓரத்தில் மனித உருவம் ஒன்றும் உள்ளது.

இந்நடுகல் கல்வெட்டு கி.பி 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நுளம்ப மன்னன் ஸ்ரீ மாறன் பல்லவன் காலத்தைச் சேர்ந்தது. திருப்பத்தூர் மீது எடுக்கப்பட்ட போரில், திருப்பத்தூர் அழிந்த போது தாயலூர் கிராமத்தைச் சேர்ந்த "மழவர் பையன்" என்ற வீரன் போரிட்டு இறந்துள்ள செய்தியைப் பதிவு செய்கிறது. திருப்பத்தூர் என்னும் பெயர் 1200 ஆண்டுகளுக்கு முன்பே வழக்கில் இருந்த வரலாற்றுச் சிறப்பை இந்நடுகல் கல்வெட்டு தாங்கி நிற்கிறது. மேலும் திருப்பத்தூர் எயில் நாட்டில் இருந்ததையும் இக்கல்வெட்டு உறுதி செய்கிறது. கல்வெட்டு வாசகம் பின்வருமாறு,

"ஸ்வஸ்தி ஸ்ரீ நுளம்ப சீமா

றன் எயினாடான் தாயலூ

ருடைய மழப்பையன் திருப்பத்

தூர் அழிந்

த நாட்பட்டான்"

என்று முடிகிறது. இந்நடுகல்லைத் தூக்கி நிறுத்தினால் தலைபிள்ளையக் காவு கேட்கும் என்று இவ்வூர் மக்கள் நம்புகின்றனர். பொங்கல் தினத்தன்று இக்கல்லுக்குப் பொங்கலிட்டும் படையலிடப்படுகிறது.



*3.* **சோழர் காலத்துக் கல்வெட்டும் நடுகல்லும்**

ஏலகிரிமலையிலுள்ள நிலாவூரில் உள்ள வயல் வெளியில் கி. பி. 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிற்காலச் சோழர்களின் கல்வெட்டும் நடுகல்லும் ஒரே இடத்தில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கல்வெட்டானது படுத்த நிலையில் உள்ளது. இதன் நீளம் 5 அடியாகும். அகலம் 3.5 அடியாகும் இது ஒரு பெரிய பலகைக் கல்லில் எழுதப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஏலகிரிமலையில் நடந்த போரில் தன் தாய் நாட்டைக் காக்கும் பொருட்டு வீர மறவன் ஒருவன் உயிர்விட்ட வரலாற்றுச் செய்தியை இக்கல்வெட்டு எடுத்துரைக்கிறது.

இக்கல்வெட்டானது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தில் எயில்நாடு இருந்ததையும் அப்போது ஏற்பட்டப் போரில் ஊர் அழிந்த போது இவ்வீரனும் பட்டான் (இறந்தான்) என்பதை எடுத்துரைக்கிறது.

கல்வெட்டு வாசகம் வருமாறு,

ஜெயங் கொண்ட

சோழ மண்டலத்து

எயின் நாட்டு

ஊர் அழிய பட்டான்

என்று கல்வெட்டு வாசகம் உள்ளது. இதில் உள்ள ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்பது பல்லவர் காலத்தில் தொண்டைமண்டலம் என்று அழைக்கப்பட்ட பகுதியாகும். பிற்கால சோழர்களின் ஆளுகையின் கீழ் இப்பகுதி வந்த பிறகு ஜெயங் கொண்ட சோழ மண்டலம் என்று பெயர் மாற்றம் பெற்றதை அறிய முடிகிறது. இக்கல்வெட்டில் இடம் பெறும் எயில் நாடு என்பது திருப்பத்தூர், ஏலகிரிமலை ஆகிய ஊர்களை உள்ளடக்கிய பகுதியாகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய

சோழர்களின் நாட்டுப் பிரிப்பு முறையை இக்கல்வெட்டானது தாங்கி நிற்பது சிறப்புக்குரிய ஒன்றாகும்.

இக்கல்வெட்டின் அருகில் நடுகல் ஒன்று உள்ளது. இந்த நடுகல் வீரன், கல்வெட்டுக் குறிப்பிடும் வீரனாக இருக்கலாம். 5 அடி உயரமும் 3.5 அடி அகலமும் கொண்ட பெரிய பலகைக் கல்லில் வீரனின் தோற்றம் பிரமாண்டமாகச் செதுக்கப்பட்டுள்ளது. வலது கையில் நீண்ட வாளும் இடையில் கச்சுடன் கூடிய குறுவாளும் வைத்துள்ளார். வலதுபக்கம் வாரி முடிக்கப்பட்டக் கொண்டையும், காதுகளில் உள்ள காதணிகளும் நுட்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. கழுத்தில் ஆபரணங்களும், கைகளில் கடகங்களும், கால்களில் வீரக்கழல்களையும் வீரன் அணிந்துள்ளார். இச்சிலையின் வலதுபக்க மேல் மூலையில் இரண்டு தேவர்கள் இவ்வீரனை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் காட்சியும் இடம் பெற்றுள்ளது. இவ்வூர் மக்கள் பொங்கல் தினத்தில் இந்நடுகல்லுக்குப் படையலிட்டு வணங்குகின்றனர்.



***4. அரியவகை பாறை நடுகல்***

ஏலகிரிமலையிலுள்ள மங்களம் கிராமத்தில் இருந்து மலை உச்சியிலுள்ள சுவாமிமலை கோயிலுக்குச் செல்லும் காட்டுப்பகுதியில் இந்நடுகல் இயற்கையான பாறையில் செதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இதுவரை கிடைத்துள்ள நடுகற்கள் பலகைக் கல்லில் புடைப்புச் சிற்பமாக செதுக்கி வைக்கப்பட்டிருப்பதே கிடைத்திருக்கின்றன. ஆனால் இயற்கையாக அமைந்த பாறையில் நடுகல் அமைந்திருப்பது இதுவே முதல்முறை ஆகும். நடுகல் அமைப்பானது இடது பக்கம் பெரிய கொண்டையிட்டு, கையில் அம்பினை வைத்திருக்கிறது. இடையில் கச்சுடன் கூடிய சிறிய குறுவாள் ஒன்றும் காணப்படுகிறது.

சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான அகநானூறு என்னும் நூல் 269 பாடலில், வெட்சி மறவர்கள் கவர்ந்து (திருடுதல்) சென்ற ஆநிரைகளை (மாட்டு மந்தை) கரந்தை வீரர்கள் மீட்டுப் போரில் உயிர் விட்டனர். இறந்த வீரர்களுக்கு இயற்கையாகவே நடுகல் போல் அமைந்திருக்கும் ஒரு பெரிய பாறையில் இறந்த வீரனின் உருவத்தைச் செதுக்கினர். பின்னர் அதை நீராட்டி, மஞ்சள்பூசி, கரந்தைப் பூக்களைச் சூட்டினர் என்று அப்பாடல் சொல்கிறது.

”ஏறுடை இனநிரை பெயர பெயராது
செறிசுரை வெள்வேல் மழவர் தாங்கிய

*தறுக ணாளர் நல்லிசை நிறுமார்*
*பிடிமடிந்தன்ன குறும்பொறை மருங்கின்*
*நட்ட போலும் நடாஅ நெடுங்கல்*
*அகல் இடங் குயின்ற பல்பெயர் மண்ணி"*

*அகம் 269 - (4 - 8)*

*அகநானூற்றில் சொல்லப்பட்ட ஏறத்தாழ அதே வழிபாட்டை இந்த பாறை வடிவ நடுகல்லுக்கும் மக்கள் வழிபாடு செய்கின்றனர். இந்நடுகல்லை நீராட்டி, மாஇலை, செண்டுமல்லி, பண்ணைப் பூ, வேப்பம் இலை போன்ற பல மலர்களைப் படையலாக இட்டு வழிபடுவது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு*



*முந்தைய பாறை வடிவ நடுகல் வழிபாட்டின் எச்சத்தை நாயக்கர் காலம் வரை நடைமுறைப்படுத்தப்பட்ட வழிபாட்டு முறை, இன்று வரை தொடர்ந்து வருவது தமிழரின் பண்பாட்டுச் சிந்தனையைச் சிறப்பாக எடுத்துரைக்கிறது என்று கூறினார்.*

***5. புலிக்குத்திப் பட்டான் நடுகல்***

*ஏலகிரி மலையிலுள்ள அத்தனாவூரில் புலிக்குத்திப்பட்டான் நடுகல் ஒன்று உள்ளது. அத்தனாவூர் பேருந்து நிறுத்ததிலுள்ளது ஓட்டல் அருவி. இத்தங்கும் விடுதியின் உள்ளேயுள்ள புடங்கனேரி மற்றும் முட்லி மரங்களின் அடியிலுள்ளது இந்நடுகல் 5அடி உயரமும் 3அடி அகலமும் கொண்ட பிரமாண்டமான பலகைக் கல்லில் இந்நடுகல் நேர்த்தியுடன் செதுக்கப்பட்டுள்ளது. இது சோழர் காலத்து நடுகல்லாகும்.*

இந்நடுகல் ஆநிரைகள் (ஆடு, மாடு) அல்லது ஊர் மக்களைத் தாக்கிய (அ) கொன்ற புலியை எதிர்த்துப் போரிட்டு, அப்போரிலே புலியைக் கொன்று, தானும் இறந்து போன வீர மறவனுக்கு அவ்வூர் மக்கள் நடுகல், எடுத்து தெய்வமாக வழிபடுவதை அறிய முடிகிறது. ஏலகிரி மலைகளில் ஒரு காலத்தில் கொடிய புலிகள் உலவி

வந்தன என்பதற்கு இந்நடுகல் சிறந்த சான்றாகும். வீரனின் உருவம் பெரிய அளவில் செதுக்கப்பட்டுள்ளது. இது வீரனுக்கு முக்கியத்துவம் தரும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது. வீரன் வலது புறம் கொண்டையிட்டுள்ளான். இரண்டு கைகளிலும் நீண்ட வாள்கள் உள்ளன. வலது கையிலுள்ள நீண்ட வாளினால் புலியின் வயிற்றில் வீரன் குத்துகிறான். இடது கையிலும் வாள் ஒன்று உள்ளது. அந்த இடது கையைப் புலி கௌவி உள்ளது. புலி சிறிய அளவிலேயே உள்ளது. புலியும் வீரனோடு வீரத்தோடுப் போரிடுவது போல வடிவமைக்கப்பட்டுள்ளது. நடுகல் வீரன் கைகளில் கடகங்களும், கால்களில் வீரக்கழல்களும் வீரன் அணிந்துள்ளான். இடைக்கச்சில் குறுவாள் ஒன்று உள்ளது. புலியோடு போரிடுவதற்காக இவ்வீரன் முன்னெச்சரிக்கையாக இரண்டு கைகளிலும் வாள்களை எடுத்துக்கொண்டு, இடையில் வாளை சொருகிக் கொண்டு மூன்று வாள்களோடு சென்றதை இச்சிற்பம் எடுத்துரைக்கிறது.

வீரன் கழுத்தில் ஏராளமான ஆபரணங்கள் அணிந்துள்ள காரத்தினால், அருவி(32) கீழ்க்கண்டவாறு கூறுகிறார். "இந்த வீரனுக்குத் திருமணம் நடைபெறும் நாளன்று, இவரின் மாடுகள் காட்டுக்கு மேய சென்றவைத் திரும்பவில்லை. இவற்றைப் புலிகள் அடிப்பதாகக் கேள்விப்பட்ட வீரன் திருமணக் கோலத்தோடு (கழுத்தில் ஆபரணம் அணிந்து கொண்டு) புலியோடு போரிட்டு இறந்து போனார்" என்று கூறுகிறார். ஆனால் இவ்வீரன் ஊரைக் காக்க புலியோடு போரிட்டு உயிர் விட்ட வீர மறவனாவார்.

மேலும் இந்நடுகல்லை இவ்வூர் மக்கள் "புலிக்குட்டி சீயன் சாமி" என்றழைக்கின்றனர். புலியைக் குத்திய சீயன் என்று பொருள் கொள்ளலாம். ஏலகிரி மலைவாழ் மக்கள் தாத்தாவைச் சீயன் என்பர். புலியைக் குத்திய தாத்தா (அ) பாட்டான் (அ) முன்னோன் என்று பொருள் கொள்ளலாம்.

எழுத்துப்பொறிப்புகள் ஏதும் இல்லை. வெள்ளிக் கிழமைகள் மற்றும் பொங்கல் திருநாளன்று இவ்வீரனுக்கு மஞ்சள், குங்குமம், வேப்பிலை, பூக்கள், பழங்கள் வைத்து கோழி அறுத்து படையலிடப்படுகிறது.



**முடிவுரை**

*மனித குடியேற்றத்தின் முதல் இடமாக இருக்கும் மலைப் பகுதிகள் ஏராளமான கல்லாயுதங்களையும், கல்வெட்டுகளையும், நடுகற்களையும் தாங்கி நிற்பது இவற்றில் பழமைக்குத் தக்கச் சான்றாகும். ஏலகிரிமலையும் வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய கற்கோடாரிகள், பல்லவர்கால கல்வெட்டு நடுகல், சோழர் கால கல்வெட்டு நடுகல், சங்க இலக்கியங்களில் இடம் பெறும் அரிய வகை பாறை நடுகல் வகை, வேட்டைச் சமூகத்தின் எச்சமாக நிற்கும் புலிக்குத்திப்பட்டான் நடுகல் ஆகியவை இம்மலையின் பழமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. மேலும் திருப்பத்தூர் என்னும் ஊர் எயில் நாட்டில் இருந்ததையும் இவ்வூருக்கு இப்பெயர் பல்லவர் காலம் (கி. பி. 7) தொட்டே வழக்கில் இருந்ததையும் உறுதிப்படுத்துகின்றன.*

*தற்காலத்தில் இம்மலைப் பகுதி சுற்றுலாத் தலமாக விளங்குவதால் இங்குள்ள தொல்லியல் சான்றுகள் அழிவின் விளிம்பில் உள்ளன. இவற்றை எடுத்தியம்பி வருங்கால ஆய்வாளர்களுக்கு இம்மலையில் சிறப்புகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.*

**ஆய்வுக்குத் துணை நின்ற நூல்கள்**

*1. சோமசுந்தரனார் பொ. பே, அகநானூறு, பாடல் 269 : 4 - 8*

**தகவலாளர்கள்**

*2. நீலமேகம் இரா, (32) ஆய்வியல் நிறைஞர் மாணவர், மங்களம், ஏலகிரிமலை*
*3. அருவி (34), அருவி தங்கும் விழுதி உரிமையாளர், அத்தனாவூர், ஏலகிரிமலை.*